MC.32/2025

31.10.2025

PW2 – மஞ்சுளா க/பெ. கணேசன், வயது–48

எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 03.55 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 04.10 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathu in accordance with the provision of Act X of 1873 of the day of 31.10.2025

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

உங்கள் மகள் என்ன பரிகாரம் கோரி இவ்வழகினை தாக்கல் செய்துள்ளார் என்றால் எதிர்மனுதாரர் விவாகாரத்து கோரி வழக்கு தாக்கல் செய்த காரணத்தினால் என்னுடைய மகள் ஜீவனாம்சம் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். விவாகரத்து வழக்கில் உங்களுடைய மருமகன் உங்கள் மகளுக்கு ஜீவனாம்சம் கொடுத்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. உங்கள் மகளுக்கும், பேரனுக்கும் யார் செலவுகளை செய்து வருகிறார் என்றால் நாங்கள் தான் செய்து வருகிறோம். உங்களுடைய பேரன் பள்ளியில் படிக்கிறாரா என்றால் விநாயகா மெட்ரிகுலேசன் பள்ளியில் 3–ம் வகுப்பு படித்து வருகிறார். உங்களுடைய பேரன் பள்ளியில் படித்து வருவதற்கான ஆவணம் ஏதேனம் நீங்கள்

பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் மகளுக்கும் மருமகனுக்கும் என்ன பிரச்சனை என்றால் அடித்து துன்புறுத்தி என் மகளை இரயிலில் ஏற்றிக்கொண்டு இங்கு வந்து இறக்கிவிட்டார். அதன் பிறகு உங்கள் மகள் தற்கொலை முயற்சி ஏதேனும் செய்தாரா என்றால் இல்லை. உங்கள் மகள் தற்கொலை முயற்சி செய்ததற்கு காவல் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு வந்து உங்களை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். ஆனால் என் மகள் தற்கொலை முயற்சி எதுவும் செய்யவில்லை. உங்கள் மகள் எப்போதாவது தருமபுரி அரசு மருத்துவமனையில் ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றாரா என்றால் எதிர்மனுதாரர் அழைத்து சென்றதாக சொன்னார்கள் எனக்கு நேரடியாக தெரியாது. உங்கள் மகள் பிரச்சனை தொடர்பாக பஞ்சாயத்து நடைபெற்றதில் நீங்கள் பங்கேற்றீர்களா என்றால் பங்கேற்றேன். அந்த பஞ்சாயத்தில் என்ன முடிவு எட்டப்பட்டது என்றால் என் மகளை அழைத்துசெல்வதாக எதிர்மனுதாரர் சொன்னார் ஆனால் அவர் அழைத்துச்செல்லவில்லை. பஞ்சாயத்தில் உங்கள் மருமகன் உங்கள் மகளை ஒரு வாரத்தில் வீட்டிற்கு அழைத்துச்செல்வதாக சொன்ன விவரம் உங்கள் மகளுக்கு தெரியுமா என்றால் நான் சொல்லவில்லை என் மகளும் அதை கேட்கவில்லை. நீங்கள் உங்கள் மகளுடன் நீதிமன்றத்திற்கு வருவீர்களா என்றால் அவ்வப்போது வருவேன். விவாகரத்து வழக்கில் உங்கள் மகளுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளீர்களா என்றால் இரண்டு முறை வந்துள்ளேன். உங்கள் மருமகன் திருப்பூரில் பனியன் கம்பெனியில் வேலை செய்து மாதம் ரூ.50,000/- சம்பாதித்து வருவதாக சொல்லியுள்ளீர்கள்

எந்த கம்பெனியில் அவர் வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. யார் உங்களுக்கு உங்கள் மருமகனின் வேலை மற்றும் வருமானம் குறித்து சொன்னார்கள் என்றால் அப்படி சொல்லி தான் என் மகளை பெண் கேட்டு திருமணம் செய்து கொண்டார். இது நாள் வரையிலும் என் மருமகன் அங்கு தான் வேலை செய்து வருகிறார். நீங்கள் எப்போதாவது திருப்பூருக்கு சென்றுள்ளீர்களா என்றால் 3, 4 முறை சென்றிருப்பேன். உங்கள் மகள் என்ன படித்திருக்கிறார் என்றால் 12-ம் வகுப்பு முடித்து கல்லூரியில் படிக்கும்போது தான் என் மகளை பெண் கேட்டு படிக்க வைப்பதாக சொல்லி திருமணம் செய்துகொண்டார். உங்கள் மகளை உங்கள் மருமகன் தையல் வகுப்பிற்கு அனுப்பினாரா என்றால் எனக்கு தெரியாது. உங்களுடைய மகள் விவாகாரத்து வழக்கில் ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு இதுநாள் வரையிலும் ரூ.1,70000/- வாங்கிய தொகையை என்ன செய்தார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் மகள் தவறான நடவடிக்கையில் ஈடுபட்ட காரணத்தினால் உங்கள் மருமகன் அதை கேட்டதற்கு உங்கள் மகளுக்கும் மருமகனுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அது தவறாகும். என் மருமகன் அவருடைய தவறை மறைப்பதற்காக என் மகள் மீது வீணாக சொல்லுகிறார். உங்கள் மகள் சரிவர உங்கள் மருமகனிடம் நடந்துகொள்ளாத காரணத்தினால் தான் உங்கள் மருமகன் உங்கள் மகளுக்கு ஜீவனாம்ச தொகை கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மகளுக்கு ஆதரவாக தவறான சங்கதியை சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

இம்மனுவானது 1–ம் மனுதாரரை பொறுத்தவரை தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.10.31 16:42:22 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.